**இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் - 2020**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் (''பல்கலைக்கழகம்'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பல்கலைக்கழகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு பல்கலைக்கழகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பல்கலைக்கழகம் இணங்கியிருந்ததா என்பதும்,

- பல்கலைக்கழகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- பல்கலைக்கழகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு

அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ''திட்டமிட்டு பேணுதல்'' நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. ரூபா 483,321,635 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியளவில் இன்னும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டிடம், அலுவலக உபகரணம் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் 2020 ஆம் ஆண்டில் மீள்பெறுமதியிடப்பட்டு 2020 நிதிக்கூற்றிற்கு சேர்க்கப்பட்டுள்ளது. அறிக்கையில் குறிப்பிடப்பட்ட மீதி பொருள் வகைகளை மீள்மதிப்பீடு செய்வதற்கு பொது நிர்வாகத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 69 ஆம் பந்தியின் பிரகாரம் சொத்தொன்று பயன்பாட்டிற்கு கிடைக்க்கூடியதாக இருக்கும் போது அதன் பெறுமானத்தேய்வு ஆரம்பிக்கப்படுகின்றது. 2017 தொடக்கம் 2019 வரையான ஆண்டு காலப்பகுதியின் போது பெறப்பட்ட ரூபா 39,399,513 கிரயமான 08 ஆய்வுகூட உபகரணங்கள் 2021 மார்ச் 04 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு தயாராக காணப்படாத போதிலும் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் | கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மாணவர்களின் செயன்முறை அமர்வுகளிற்கு பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவது பயன்படுத்தும் பிரிவு தலைவர் மற்றும் பீடத்தின் பீடாதிபதி ஆகியோரின் பொறுப்பாகும். உபகரணம் பயன்படுத்தப்படாவிட்டால் அது பீடத்தின் பீடாதிபதியின் வினைத்திறனின்மையாகும். | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படுதல். |

பொது ஒதுக்கம் என்பன நிதிக்கூற்றுக்களில் ரூபா 16,505,637 ஆல் முறையே அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2020 செப்தெம்பரில் வெளிவாரி பட்டங்கள் மற்றும் தொழில்சார் கற்றலிற்கான நிலையத்திற்காக சுய நிதியிடல் நடவடிக்கைகள் மூலம் ரூபா 3,979,048 கிரயத்தில் வளிப்பதனாக்கிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் சொத்துக்களின் கிரயம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக எடுக்கப்பட்டு அபிவிருத்தி நிதியக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | மூலதன செலவின தொகையை அதிகரிப்பதற்கும் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஆண்டின் வருமானமாக பயன்படுத்தப்பட்ட தொகையை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் முழுவதும் ஆண்டிற்கான வருமானமாக காலக்கழிவிடப்பட்ட தொகையை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரூபா 57,004,044 கிரயமான முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட அலுவலக உபகரணங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் சபைக் குறிப்பாணையின் பிரகாரம் 2 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான மேலதிக பயன்தரு ஆயுட்காலத்துடன் 2020 யூலை 01 இல் ரூபா 20,637,790 கூட்டுத்தொகையாக மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வை கணிப்பீடு செய்வதிலுள்ள கணித ரீதியான தவறுகள் காரணமாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ரூபா 3,310,493 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. ஆகையால் நிதிக்கூற்றுக்களில் ஆண்டின் பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | குறித்த மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத்தேய்வுக் கணிப்பீட்டின் போது கணிப்பீட்டுத் தவறு இடம்பெற்றிருந்தது. ஆகையால் 2021 ஆம் நிதியாண்டில் ரூபா 3.3 மில்லியன் தொகையிலுள்ள வேறுபாட்டை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ரூபா 3,310,493 தொகையான குறைத்துக் காட்டப்பட்ட பெறுமானத்தேய்வை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டில் துரித உயர் கல்வி விரிவாக்கம் மற்றும் அபிவிருத்தி (ஏஎச்ஈஏடி) செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 23,055,912 கிரயமான நாற்பத்து நான்கு iMac கணனிகள் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பல்கலைக்கழகத்திலுள்ள செயற்பாட்டு தொழில்நுட்ப செயலகத்திலிருந்து (ஓரீஎஸ்) தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னர் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட கடிதத்தில் கூறப்பட்டவாறு வருடாந்த அடிப்படையில் தொகைகளை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏஎச்ஈஏடி செயற்பாட்டு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தொகைகளை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடர் கடன், விழா முற்பணம், பெறவேண்டிய சம்பளங்கள், பிணைமுறி மீறல்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 9,719,273 கூட்டுமொத்த மீதி 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்யப்படாமல் 01 தொடக்கம் 19 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாக காணப்பட்டன. | மீதிக்கு எதிராக சட்ட நடவடிக்கையை தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதுடன் ஏனைய மீதிகளை அறவீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | மேலதிக தாமதமின்றி பெறவேண்டிய நிலுவைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒப்பந்ததாரர்கள் மற்றும் வழங்குநர்களிற்கு செலுத்த வேண்டிய ரூபா 12,834,860 கூட்டுமொத்தமான பிடித்துவைத்தல் பணம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்ப்பனவு செய்யப்படாமல் 2 தொடக்கம் 7 ஆண்டுகள் வரையான காலவீச்சில் காணப்பட்டன. இது தொடர்பாக பிடித்துவைத்தல் பணத்தை செலுத்துவதற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் வருமானமாக கருதுவதற்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிடித்துவைத்தல் மீதிகளை செலுத்துவதற்கு அல்லது உரிய பிரிவுகளின் பரிந்துரையுடன் பல்கலைக்கழக வருமானத்திற்கு இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக காணப்படும் உரிமைகோரப்படாத உரிய தொகையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செலுத்த வேண்டியவைகளை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது பல்கலைக்கழக வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை | | | |
| (i) VII ஆம் அத்தியாயத்தின் 02 (XV) ஆம் பிரிவு, 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | 2020 ஆம் ஆண்டில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 31,559,910 கூட்டுமொத்தமான நிலையான வைப்பு தொடர்பாக நிதி அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழகத்தின் நிதி ஆணைக்குழு ஆகியவற்றின் இணக்கப்பாடு மற்றும் முன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை . | 2020 ஆம் ஆண்டின் போது உழைக்கப்பட்ட நிதி மீதிகள் மற்றும் பிணைமுறி மீறல் தொகைகள் மாத்திரம் நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்டிருந்தன. எனினும் நிலையான வைப்புக்களில் அவற்றை வைப்புச் செய்வதற்கு முன்னர் கணக்காய்வு ஐயவினா மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளில் கூறப்பட்டவாறு நிதி அமைச்சு, கல்வி அமைச்சு (வரிசை அமைச்சு), பல்கலைக்கழக சபை மற்றும் நிதி ஆணைக்குழு ஆகியவற்றின் இணக்கப்பாடு மற்றும் முன் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உயர் கல்வி நிறுவனங்களின் தாபன விதிக்கோவை மற்றும் நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) XX ஆம் அத்தியாயத்தின் 3(1) ஆம் பிரிவு மற்றும் 2017 யூலை 10 ஆம் திகதிய 10/2017 ஆம் இலக்க பல்கலைக்கழக | அனைத்து பதவியணியினரும் அவர்களது வருகை மற்றும் வெளிச்செல்லல்களை கைவிரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரத்தில் பதிவுசெய்ய வேண்டிய போதிலும் கல்விசார் பதவியணியினர் | பொதுவான நடைமுறையொன்றாக கல்விசார் பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்லல்கள் இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழக முறைமையில் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10/2017 ஆம் இலக்க சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் வருகை மற்றும் வெளிச்செல்லல்கை |

| | | | |
|---|---|---|---|
| மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை கடிதம் | அதனுடன் இணங்கியிருக்கவில்லை. | பேணப்படுவதில்லை. மேலும் கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் இவ் விடயம் தொடர்ச்சியாக குறிப்பிடப்பட்ட போதிலும் கல்விசார் பதவியணியினரிற்கான இம் முறைமையை அமுல்ப்படுத்துவதில் பல்கலைக்கழக முறைமை சவால்களை எதிர்கொள்ளுகின்றது. | ள பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 16,054,534 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் ஒப்பிடும் போது அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 229,656,231 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 213,601,697 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. பணிக்கொடை மற்றும் ஒப்பந்த சேவைகளின் செலவினம் குறைவடைந்தமை இம் முன்னேற்றத்திற்கான காரணங்காளாக பிரதானமாக பங்களித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) விரிவுரையாளர் ஒருவரால் உடன்படிக்கை மீறப்பட்டமைக்காக பிணைமுறிப் பெறுமதியை அறவீடு செய்வதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு ஆறு ஆண்டுகளிற்கு மேலாக தாமதித்திருந்த பொறுப்பான உத்தியோகத்தர்களின் கவனயீனம் காரணமாக ரூபா 1.73 மில்லியன் நட்டம் பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும் அவ் உத்தியோகத்தர்களிற்கு எதிராக நாளதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2000 திசெம்பர் 06 தொடக்கம் 2020 யூலை 13 வரை பொறுப்பான வகையில் தமது கடமைகளை ஆற்றியிருக்காத பொறுப்பான உத்தியோதகத்தர்களிடமிருந்து ரூபா 1.73 மில்லியன் நட்டத்தை அறவீடு செய்வதற்கு கல்விசாரா தாபன பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்பான உத்தியோகத்தர்களிமிருந்து நட்டங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் (திருத்தப்பட்டவாறு) பிரகாரம் 1999 தொடக்கம் 2008 | தொழில் திணைக்களம் ஊழியர் பங்களிப்பை செலுத்துமாறு பல்கலைக்கழகத்திற்கு அறிவுறுத்தியிருந்தது. இதன் | உரிய ஊழியர்கள் அல்லது பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து ஊழியர் பங்களிப்புக்களை அறவீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| வரையான ஆண்டுகளின் போது பல்கலைக்கழகத்தில் அமைய/ நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 28 ஊழியர்களிற்கான ஈபிஎவ் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் உரிய திகதிகளில் பங்களிப்புக்களை செலுத்துவதற்கு தவறியதன் அடிப்படையில் ரூபா 1,215,442 தொகையான மேலதிகக் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக ரூபா 1,022,380 கூட்டுத்தொகையான ஊழியர் பங்களிப்பானது ஊழியர் உழைப்புக்களிலிருந்து கழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பல்கலைக்கழக நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | விளைவாக பல்கலைக்கழக சபையின் அங்கீகாரத்துடன் பல்கலைக்கழகத்தின் உருவாக்கப்பட்ட நிதியத்திலிருந்து ரூபா 1,022,380 மொத்த தொகைக்கான ஊழியர் பங்களிப்பை பல்கலைக்கழகம் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் இச் செயன்முறையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களில் பெரும்பாலானவர்களும் பங்களிப்பை பெற்றிருந்த சில ஊழியர்களும் தற்போது பல்கலைக்கழக சேவையிலிருந்த ஓய்வு பெற்றிருந்தனர். | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டு வெளிவாரி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - 2016/2017 இற்காக கலை இளமானி பட்டப்படிப்பிற்காக 511 மாணவர்களிடமும் வணிக நிர்வாக இளமானி பட்டப்படிப்பிற்காக 89 மாணவர்களிடமும் ரூபா 24 மில்லியன் தொகையை பல்கலைக்கழகம் சேகரித்திருந்தது. எனினும் BA இற்கான பாடத்திட்டம் இடைநிறுத்தப்பட்டு மறுசீரமைக்கப்படுதல் மற்றும் BBA இற்கு குறைந்த எண்ணிக்கையிலான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்தமை காரணமாக பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் 2021 யூலை 20 வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக கற்கைநெறியை தொடங்குதல் தாமதிப்பதன் காரணமாக மாணவர்களின் எதிர்கால வாழ்க்கை மோசமாக பாதிக்கப்படும். | குறைவான விண்ணப்பங்கள் பெறப்பட்டமை காரணமாக வணிக நிர்வாக இளமானி (BBA) மற்றும் வணிக இளமானி (Bcom) பட்டப்படிப்புக்களிற்காக புதிய மாணவர்களை மீளப்பதிவு செய்வதற்கான விண்ணப்பம் மீளக் கோரப்பட்டிருந்ததுடன் அதற்கிணங்க BBA மற்றும் Bcom நிகழ்ச்சித்திட்டங்களிற்காக அதிக விண்ணப்பதாரிகள் பதிவுசெய்து வருகின்றதுடன் 2021 யூன் அளவில் நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | மேலதிக தாமதமின்றி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களை தொடங்குவதற்கும் கற்கைநெறி கையேடுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 விளைவற்ற அல்லது குறைப்பயன்பாடுடைய ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | பிரயோக விஞ்ஞான பீடத்திற்கான ஆய்வுகூட தொகுதியின் நிர்மாண வேலைகள் ரூபா 84,156,395 கிரயத்துடன் 2011 ஒக்தோபர் 31 இல் ஆரம்பிக்கப்பட்டு 2014 பெப்ரவரி 15 பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் 2016 ஆம் ஆண்டில் மின் பொருத்துக்களிற்காக ரூபா 1,856,467 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் தேவையான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுகையிலுள்ள தாமதங்கள் மற்றும் ஆய்வுகூடத்திற்கு தேவையான வடிகாண், எரிவாயு மற்றும் நீர் குழாய்வரிசைகள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக ஆய்வுகூடத் தொகுதி 6 ஆண்டுகளிற்கு மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீர் வழங்கல், வடிகாண் மற்றும் எரிவாயு வழங்கல் வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதனை 2021 திசெம்பர் மாத நடுப்பகுதியளவில் பூர்த்தி செய்ய முடியும் என்று நம்புகின்றோம். | மேலதிக தாமதமின்றி ஆய்வுகூடத் தொகுதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 மார்ச் 15 இல் 5 ஆண்டு உத்தரவாதக் காலப்பகுதிகளுடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 546,250 கிரயமான இயந்திர பொறியியலாளர் ஆய்வுகூடத்திலுள்ள பத்தொன்பது செயற்பாட்டு மின்பிறப்பாக்கிகள் நான்கு ஆண்டுகளிற்கு மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பீடத்தின் பீடாதிபதியுடன் சேர்ந்து அக்காலத்தின் பிரிவுத் தலைவர் முறையான திட்டமிடலின்றி இச் செயற்பாட்டு மின்பிறப்பாக்கிகளை கொள்வனவு செய்வதற்கு கோரியிருந்தார். இது தலைவர் மற்றும் பீடாதிபதியின் வினைத்திறனின்மை காரணமாக ஏற்பட்டது. | வினைத்திறனின்மைக்கு எதிராகவும் மேலதிக தாமதமின்றி மின்பிறப்பாக்கிகளை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 93.5 மில்லியன் கூட்டுமொத்தமான ஆய்வுகூட உபகரணங்கள் 1 தொடக்கம் 4 ஆண்டுகள் வரையான காலவீச்சில் | புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட பீடமாக இருப்பதால் சூழ்நிலைகளையும் அவசரத்தையும் கருத்தில் கொண்டு தேவையான இடத்தையும் உபகரணங்களையும் ஒரே நேரத்தில் பாதுகாப்பதற்கு திணைக்களம் திட்டமிட்டிருந்தது. | உற்பத்தித்திறன்மிக்க வகையில் உபகரணங்களை பயன்படுத்தவதற்கும் உத்தரவாத மற்றும் சேவைக் காலப்பகுதியின் போது சீரான தொழிற்பாட்டை |

குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாமல் விளைவற்றிருந்தன. மேலும் 2013 தொடக்கம் 2016 வரையான காலப்பகுதியின் போது வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்றலிற்கான நிலையத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 461,577 கூட்டுமொத்த கிரயமான 02 வளிப்பதனாக்கிகள், 20 கணனி மேசைகள் மற்றும் ஒரு மின்னியல் திரை மற்றும் 02 விரிவுரை மண்டபங்கள் ஆகியன 5 ஆண்டுகளிற்கு மேலாக குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களிற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இட விரிவாக்கத்திற்கான மூலதன நிதியைப் பாதுகாப்பதில் உள்ள வரையறைகள் காரணமாக சில உபகரணங்களை இயக்குவதை தாமதப்படுத்த வேண்டியிருந்தது. இந்த விரிவுரை மண்டபங்களின் வளங்களை எதிர்காலத்தில் அவற்றின் அதிகபட்ச பயன்பாட்டிற்காக இடமாற்றம் செய்வதற்கு தேவையான நடவடிக்கையை நாங்கள் எடுப்போம்.

உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.4 பெறுகை முகாமைத்துவம்**

**கணக்காய்வு விடயம்**

2016 நவம்பர் 25 இல் வழங்குநரொருவரிற்கு ரூபா 11,647,200 தொகைக்கு CNC Machine EDM Solid இனை கொள்வனவு செய்வதற்கான கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் கேள்வியை வழங்குவதிலுள்ள தாமதம் மற்றும் விலை உயர்வு காரணமாக வழங்குநர் தொடர்ந்திருக்கவில்லை.
பின்னர் 2019 ஆம் ஆண்டில் கேள்விகளுக்காக இன்னொரு அழைப்பு விளம்பரப்படுத்தப்பட்டு இன்னொரு வழங்குநரிடமிருந்து ரூபா 21,104,229 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக பல்கலைக்கழகம் முதலாவதாக வழங்கப்பட்ட விலையை விட ரூபா 9,457,029 மேலதிக தொகையை செலுத்தியிருந்தது.

**முகாமைத்துவ கருத்துரை**

ஏனைய ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் டிபிசீ கூட்டங்களில் நிபுணர்களாக இருந்த ரீசீ உறுப்பினர்களை தொடர்புகொள்ளுதல் போன்ற சில உள்ளக தாமதங்களை நாங்கள் கொண்டிருந்ததால் மேற்படி கேள்வி பிணை செல்லுபடியாகும் காலத்தை நீடித்து வழங்குமாறு அனைத்து வழங்குநர்களையும் நாங்கள் கோரியிருந்தோம். விலை வேறுபாடானது பணவீக்கம் மற்றும் நாட்டின் விலை தளம்பலாக உள்ளதுடன் உற்பத்தி நாடானது ஒரு ஐரோப்பிய உற்பத்திப் பொருளாகும். அத்துடன் மேலே உள்ள ஒன்று தாய்வானைச் சேர்ந்தது. பொதுவாக, ஒத்த குறிப்புரைகளில் இவ் வகையான ஐரோப்பிய உற்பத்திப்பொருட்களின் செயலாற்றல் தாய்வான், ஆசிய மற்றும் சீன உற்பத்திப்பொருட்களை விட கணிசமானளவு அதிகமாக உள்ளது.

**பரிந்துரை**

கேள்வி பிணைமுறி காலாவதியாவதற்கு முன்னர் கேள்வியை வழங்குவதற்கும் எதிர்காலத்தில் சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்களை தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2010 ஆம் ஆண்டில் ரூபா 112 மில்லியன் ஒப்பந்தப் பெறுமதியில் முகாமைத்துவ மற்றும் வணிக பீடத்திற்கான கட்டிடத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்நதத்தை பல்கலைக்கழகம் வழங்கியிருந்ததுடன் 2014 பெப்ரவரி 28 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. நிர்மாண வேலைகள் 2014 ஏப்ரல் 20 இல் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்ததாரரிடமிருந்து ரூபா 2,977,412 தொகையான தாமதக் கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிருக்காததுடன் ரூபா 2,808,880 தொகையான பிடித்துவைத்தல் பணம் ஆறு ஆண்டுகளிற்கு மேலாக தாமதக் கட்டணங்களிற்கு எதிராக தீர்ப்பனவு செய்யப்படாமல் வைக்கப்பட்டிருந்தது. | பிடித்துவைத்தல் பணத்திலிருந்து பெறவேண்டிய தொகைகளை தீர்ப்பனவு செய்வதற்கான கடிதம் ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டுள்ளது. | மேலதிக தாமதமின்றி ஒப்பந்ததாரரிடமிருந்து தாமதக் கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |